ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2470/54 - 2026 ජනවාරි මස 09 වැනි සිකුරාදා - 2026.01.09

2470/54 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/15/2018/VE/50.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: ARA/LND/ACQVI/D3/51.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தி யோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2026, சனவரி 08.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர் :** பிரதேச செயலாளர், மெததும்பர.

II. **காணியின் விபரம் :** மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் தெல்தெனிய மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், பலிஸ்பத்துவ மேற்கு கோறளை சிறு பிரிவில், பம்பரகஹதெனிய (818) கிராம அலுவலர் பிரிவில், அங்குருவலகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட Maha/MDD/2018/319 ஆம் இலக்க, 2018.12.31 ஆந் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு C எனக் குறிப்பிடப்பட்டுள்ள 4.0523 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அங்குருகமவத்தை எனும் காணியின் பின்வரும் எல்லைகள் :

**01. துண்டு ‘C’ - அங்குருகமவத்தை - விஸ்தீரணம்: 4.0523 ஹெக்டயார்**

வடக்கு : வீதி, அங்குருவல கந்துர மற்றும் பி. டி. வீரசேகர உரிமை கோரும் ஏக்கர் 50 ; கிழக்கு: வீதி ; தெற்கு : வீதி, கே. பி. யசவதி உரிமை கோரும் கோபிவத்தை குடியிருப்பு மற்றும் வீதி ; மேற்கு : வீதி.

EOG 01- 0090